



### அரசுப் பள்ளி விழாவில் ஆபாச பாடல்: த.வெ.க. பெண் நிர்வாகியுடன்

# குத்தாட்டம் போட்ட உயர் கல்வித் துறை அமைச்சர்!

## பெற்றோர், கல்வியாளர்கள் கடும் கண்டனம்!

**மேலூர்:, ஜூன் 23-**

**அரசுப்பள்ளி விழாவில் ஆபாச அர்த்தம் கொண்ட பாடலுக்கு உயர்கல்வித்துறை அமைச்சர் விஸ்வநாதன், தவெக பெண் நிர்வாகியுடன் இணைந்து குத்தாட்டம் போட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கல்வித்துறை அமைச்சரின் இந்த செயலுக்கு பெற்றோர், பொது மக்கள் கல்வியாளர்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.**

மதுரை மாவட்டம், மேலூரில் முதல்வர் விஜய் மற்றும் காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி பிறந்ததினத்தை கொண்டாடும் வகையில் 'போதையில்லா தமிழகம் மற்றும் பெண்கள் விழிப்புணர்வு' மினி மாரத்தான் போட்டி நேற்று முன்தினம் காலை நடந்தது. இதனை மேலூர் தொகுதி எம்.எல்.ஏ.வும், உயர்கல்வித்துறை அமைச்சருமான விஸ்வநாதன், த.வெ.க. அமைச்சர் நிர்மல்குமார் ஆகியோர் கொடிய சைத்து துவக்கி வைப்பதாக அறிவிக்கப்பட்டிருந் தது. ஆனால், அமைச்சர் நிர்மல்குமார் நிகழ்ச் சிக்கு வரவில்லை.

பள்ளி வளாகத்திற்குள் அமைக்கப்பட்டிருந்த மேடையில் சினிமா பாடல்கள் ஒலிபரப்பு செய்யப் பட்டன. நிகழ்ச்சியை துவக்கி வைப்பதற்காக உயர்கல்வித்துறை அமைச்சர் விஸ்வநாதன் பேன்ட், டிசர்ட்டில் மேடை ஏறினார். தவெக மேலூர் நகர் இணைச் செயலாளரான சுபா ஷினி, அப்போது ஒலித்துக் கொண்டிருந்த சினிமா பாடலுக்கு ஆடுமாறு அமைச்சரை அழைத்தார். கட்சி நிர்வாகிகள் யாரும் ஆட முன் வராத நிலையில், அமைச்சர் விஸ்வநாதன் அந் தப் பாடலுக்கு ஆடுவதற்கு தயாரானார். முதலில் 'தளபதி கச்சேரி... தளபதி கச்சேரி... வாங்கனா வணக்கங்கண்ணா... வெறித்தனமா வைப் ஆக லாமா' என்ற பாடல் ஒலித்தபோது, அமைச்சரும் 'வைப்' ஆக தொடங்கி விட்டார். சிறிது நேரம் கையை மேலே, கீழே அசைத்தார். அடுத்ததாக விஜய்யின் சச்சின் படத்தில் இடம் பெற்ற, 'வாடி வாடி வாடி வாடி கை படாத சிடி... தவுசண்ட் வாட் பல்பு போல கண்ணு கூசுதேடி' என்ற ஆபாச அர்த்தங்கள் கொண்ட பாடலுக்கு செம வைப் ஆனார் அமைச்சர் விஸ்வநாதன்.

சுபாஷினியுடன் இணைந்து செம குத்தாட்டம் போட ஆரம்பித்தார். அமைச்சர் ஆடிய குஷியில் சுபாஷினியும், கீழே நின்று கொண்டிருந்த மாண வர்களையும் அந்தப் பாடலுக்கு ஆடும்படி சைகை செய்தார். அமைச்சர், த.வெ.க. பெண் நிர்வாகி யின் இந்தத் திடீர் செயலால் அங்கிருந்த கல்வி யாளர்கள், மாணவ, மாணவியருடன் வந்த பெற்றோர், பொதுமக்கள் பெரும் அதிர்ச்சி அடைந் தனர்.



மதுரை மாவட்டம் மேலூர் அரசு பள்ளி ஒன்றில் நடைபெற்ற நிகழ்ச்சியில் த.வெ.க. ஆதரவு காங்கிரஸ் கட்சியை சேர்ந்த உயர்கல்வித்துறை அமைச்சர் விஸ்வநாதன் தவெக நிர்வாகிகளுடன் சினிமா ஆபாச பாடலுக்கு குத்தாட்டம் போட்டு வழக்கம் போல் ரீல்ஸ் வீடியோ எடுத்தனர், பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள் முன் நடைபெற்ற இச்செயல் சலசலப்பை ஏற்படுத்தி உள்ளது.

"அரசு பள்ளி மேடையில் தேசிய கீதம், தேச பக்தி பாடல்களும், கல்வி மேம்பாட்டு வரிகளும் ஒலிக்க வேண்டும். அரசுப்பள்ளியில் நடக்கும் விழாவில், ஆபாச அர்த்தங்கள் கொண்ட சினிமா பாடலை ஒலிபரப்பியதே தவறு. அந்தப் பாடலுக்கு ஆளுங்கட்சி பெண் நிர்வாகியுடன், உயர்கல்வித் துறை அமைச்சரும் சேர்ந்து ஆட்டம் போட லாமா? இது தமிழக கல்வித்துறைக்கே பெருத்த அவமானம். இந்தப் பாடலுக்கு ஆடிய அமைச்ச ருக்கு, தவெகவின் சுபாஷினி கை குலுக்கி பாராட் டியது அதைவிட பெருங்கொடுமை" என அங்கி ருந்த பெற்றோர், பொதுமக்கள், கல்வியாளர்கள் கடுமையான கண்டனம் தெரிவித்துள்ளனர்.

தவெக நிர்வாகிகளின் ரீல்ஸ் மோகம் தற் போது காங்கிரஸ் கட்சியினரையும் தொற்றிக் கொண்டதா? கூட்டணி சேர்ந்தார்களா அல்லது கட்சியுடனே ஒன்றாக இணைந்தே விட்டார்களா? இனி என்னென்ன கொடுமை எல்லாம் பார்க்க வேண்டியிருக்குமோ என தமிழக மக்கள், அரசி யல் கட்சியினர் அமைச்சரின் செயலை கடுமை யாக விமர்சித்து வருகின்றனர்.

*** இதுல என்ன தப்பு?**

நிகழ்ச்சி முடிந்து வந்த உயர்கல்வித்துறை அமைச்சர் விஸ்வநாதனிடம், "மேலூர் அரசு பள் ளியில் ஆபாச சினிமா பாடலுக்கு தாங்கள் நடன மாடியது வைரலாகியுள்ளதே?" என்று நிருபர்கள் கேட்டதற்கு, "ஏங்க... முதலமைச்சரின் பிறந்த நாளை எனது மாணவர்கள், நண்பர்கள் எல் லோரும் சேர்ந்து குதூகலமாக அந்த இடத்தில் கொண்டாடினோம். இது ஒரு தப்பா சார்? முதல மைச்சரின் பிறந்தநாளில் எல்லா மாணவர்க ளும், இளைஞர்களும், யுவதிகளும் மகிழ்ச்சியில் இருந்தபோது, நீங்களும் கலந்து கொள்ளுங்கள் என்கிறார்கள். எனவே இளைஞர்களுக்கு மதிப்பு கொடுத்து ஆடினேன். இதுல என்ன தப்பாகி விடப்போகுது? ஒரு தப்பும் கிடையாதே?" என்றார்.

### அண்ணா கிராமம் ஒன்றியம், எழு மேடு கிளை கழகம் சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம்!

### முன்னாள் அமைச்சர்கள் க.பொன்முடி சி.வி.கணேசன் சிறப்புரை! என்.பலராமன் தலைமை!

கடலூர், ஜூன். 23–

கடலூர் மேற்கு மாவட்டம், அண்ணா கிராமம் ஒன்றியம் எழு மேடு கிளைக் கழகம் சார் பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் 13.6.2026 சனிக்கிழமை மாலை 6மணியளவில் எழு மேடு அண்ணா திடலில் நடை பெற்றது.

கழக பொதுக்குழு உறுப்பி னர் என்.பலராமன் தலைமை தாங்கினார்.

ஒன்றிய கழக செயலாளர் வி.கே. வெங்கட்ராமன் வரவேற் புரை ஆற்றினார்.





என். ராமு ,எஸ் குமார், டி . சதாசிவம், கே .எம். தண்ட பாணி, ஜி. சதாசிவம், கவிராஜ், கே.குமார், எஸ்.கருணாகரன், கார்த்திக், திருநாவுக்கரசு, கண் ணன், ஆர். ஜெகதீசன், கே .எஸ். சம்பத், எஸ்.சுபாஷ், ஆதி நாராயணன், கே.உத்திராபதி வி.கண்ணப்பன், கே.ராஜி, பி.அழகி மணவாளன், எஸ். பார்த்திபன், ஆர்.ராமகிருஷ் ணன், கே.ஜெயக்குமார், நந்த கோபால், ஜே.பாலாஜி, எஸ். பத்மினி, பலராமன், கே.கலிய வரதன், கே.காமேஷ் குமுத வல்லி தண்டபாணி, பி.புரு ஷோத்தமன் முன்னிலை வகித்தனர்.

கழக துணைப் பொதுச் செயலாளர் க.பொன்முடி, கட லூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் சி.வி.கணேசன், மாவட்ட அவைத்தலைவர் டாக்டர் கொ.நந்தகோபால கிருஷ்ணன் ஆகியோர் சிறப் புரை ஆற்றினர்.

இக்கூட்டத்தில் பண்ருட்டி நகர மன்றத் தலைவர், நகரச் செயலாளர் க.இராஜேந்திரன், மாவட்ட துணை செயலாளர் ஆர்.எஸ்.எம்.தணிக்கை செல் வன், நெல்லிக்குப்பம் நகரச் செயலாளர் பி.மணிவண்ணன், பொதுக்குழு உறுப்பினர் ஆர். ராதாகிருஷ்ணன், மேற்கு ஒன் றியச் செயலாளர் கே .ராமு ராமச்சந்திரன், பண்ருட்டி வடக்கு ஒன்றியச் செயலாளர் ஆர் .சந்தோஷ் குமார்,

மேல்பட்டாம்பாக்கம் பேரூர்க் கழகச் செயலாளர் வி.ஜெயமூர்த்தி, தொரப்பாடி பேரூர் செயலாளர் பி.சுந்தர வடிவேல், மாவட்ட கலை இலக் கியப் பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் வழக்கறிஞர் ஏ.மதனகுரு, முன்னாள் பட்டாம் பாக்கம் பேரூர் செயலாளர் எஸ் .சடாட்ச்சரம், மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் ஜி.கே. கதிர்காமன், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் எம். எஸ்.ராம்குமார், மாவட்ட தக வல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் வழக்கறி ஞர் டி.நாராயணன், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் வீ.சிவனேசன், முன்னாள் அரசு வழக்கறிஞர் வி.பி.ராதாகிருஷ்ணன், மாவட்ட துணை அமைப்பாளர் ம.த.யேசுதாஸ், மாவட்டப் பிரதி நிதி புருஷோத்தமன், மகளிர் அணி வாசுகி, மாவட்ட வழக்கறி ஞர் அணி துணை பரணி சந்தர் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், கிளைக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

எழுமேடு திடீர் குப்பம் கிளைச் செயலாளர் எம்.திரு மலை நன்றியுரை ஆற்றினார்.

### தி.மு.க. கல்வியாளர் அணி

## துணைத் தலைவர் - இணை, துணைச் செயலாளர்கள் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

தி.மு.க. கல்வியாளர் அணி மாநில துணைத் தலைவர் மற்றும் இணை – துணைச் செயலாளர்களாக கீழே குறிப்பிட்டுள்ளவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். இவர்கள் ஏற்கனவே நியமிக்கப்பட்ட கல்வியாளர் அணித் தலைவர் மற்றும் செயலாளர்களுடன் இணைந்து பணியாற்றுவார்கள்.

| | |
|---|---|
| துணைத் தலைவர் – | நாராயணன்,<br>திருவந்திபுரம் முதன்மைச் சாலை,<br>கே.என்.பேட்டை, கடலூர். |
| இணைச் செயலாளர்கள் – | டாக்டர் இரா. மலர்விழி ராஜா,<br>2/54, வீரபாண்டியர் தோட்டம், பூலவாரி, சேலம்.<br>திரு. ஆலடி எழில்வாணன்,<br>ஆலங்குடி ஊராட்சி நல்லூர், ஆலங்குளம், தென்காசி. |
| துணைச் செயலாளர்கள் | முனைவர் சுதா ஜெயக்குமார்,<br>தயாளு இல்லம், அபிராமி கார்டன்ஸ்,காட்டூர் சாலை, இராசிபுரம், நாமக்கல். |
| | முனைவர் ராஜ்குமார்,<br>7, மாருதி நகர், மயிலாடுதுறை. |
| | முனைவர் இளம்பரிதி<br>90, கிழக்குத் தெரு, காசாங்காடு,பட்டுக்கோட்டை, தஞ்சாவூர். |
| | திரு. உதயக்குமார்,<br>ஏ.ஜி. பிளாக், 18வது தெரு,அண்ணா நகர், சென்னை. |
| | திருமிகு அனிச்சம் கனிமொழி,<br>4, காமராஜர் வீதி, சூரப்பட்டி அஞ்சல், வீரபாண்டி, ஈரோடு. |
| | திரு. ஏ.கே. அருணகிரி,<br>5 சி, ஐஸ்வர்யா அப்பார்ட்மென்ட்ஸ், ராம் நகர், சென்னை. |
| | திரு. மே. புருஷோத்தமன்,<br>132, கொங்கு ரெட்டி தெரு, எழும்பூர், சென்னை. |
| | திரு. அணவயல் ச.கணேசன்,<br>987/1, அபூர்வா இல்லம், புளிச்சாங்காடு, அணவயல், புதுக்கோட்டை. |

**``அண்ணா அறிவாலயம்"**
**சென்னை 600 018,**
**நாள் : 22.06.2026.**

**துரைமுருகன்,**
**பொதுச்செயலாளர்,**
**தி.மு.க.**

# ஒன்றிய அரசின் மும்மொழிக் கொள்கை - மாணவர் அணி சார்பில்

# ஆளுநர் மாளிகை முன்பு இன்று கண்டன ஆர்ப்பாட்டம்!